*55*

# ஒரு மேய்ப்பனின் அக்கறை

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #22*

VI. *மூன்றாவது பஸ்காவிலிருந்து இயேசு பெத்தானிக்கு வந்து சேர்ந்தது வரை (தொடர்ச்சி).*

N. *யூதேயாவில் பிந்திய கால ஊழியம்.*

1. *இயேசுவும் எழுபது பேர்களும் (லூக். 10:1-24).*
2. *இயேசுவும் ஒரு நியாய சாஸ்திரியும் (நல்ல சமாரியனின் உவமை) (லூக். 10:25-37).*
3. *இயேசு, மரியாள் மற்றும் மார்த்தாள் (லூக். 10:38-42).*
4. *இயேசுவும் அவரது சீஷர்களும் (ஜெபத்தின்மீதான போதனை) (லூக். 11:1-13).*
5. *இயேசுவும் ஒரு பரிசேயரும் (லூக். 11:37-54).*
6. *இயேசுவும் திரளான கூட்டத்தாரும் (லூக். 12:1, 13, 54; 13:1 ஆகிய வசனங்களைக் காணவும்).*

a. *மாய்மாலம் பற்றிய போதனை (லூக். 12:1-12).*

## அறிமுகம்

*யூதேயாவில் இயேசுவின் பிந்தியகால ஊழியம் பற்றிய நமது படிப்பு தொடங்குகிறது. இந்த ஊழியம், கூடாரங்களின் பண்டிகையிலிருந்து பிரதிஷ்டையின் பண்டிகை வரையிலும், சுமார் இரண்டரை மாத காலம் நீடித்திருந்தது.*

*இந்தக் கால வேளையில் நாள் வரிசை அட்டவணை பற்றி நாம் உறுதியாய் எதுவும் கூறமுடியாது.[1] எடுத்துக்காட்டாக, இயேசு முதலில் யூதேயாவுக்கு வந்து சேர்ந்தபோது, கூடாரங்களின் பண்டிகைக்கு எருசலேமுக்குள் பிரவேசிப்பதற்கு (யோவா. 7:14) முன்பு அவர் எழுபது பேர்களை அனுப்பினார் (லூக். 10:1) என்று சிலர் நம்புகின்றார்கள்.[2] மற்றவர்கள், இந்த எழுபது பேர்களின் ஊழியத்தை யோவான் 8:59 மற்றும் யோவான் 9:1 ஆகியவற்றிற்கு இடையில் வைப்பார்கள்.[3] நமது நோக்கங் களுக்காக, நாம் யோவான் 7:14-10:21ல் உள்ள விஷயங்களை முதலில் படித்தோம், இப்போது நாம், இயேசுவின் பிந்திய யூதேயா ஊழியம் பற்றி லூக்கா பதிவு செய்தது என்ன என்பதை ஆழ்ந்து சிந்திப்போம்.[4]*

*லூக்கா 10:1-12:12ல் உள்ள வேத வசனங்களின் இந்தப் பகுதியானது,*

*பல்வேறு மக்கள் கூட்டங்களின் மத்தியில் இயேசுவின் செயல்களைக் காண்பிக்கிறது. முந்திய பாடத்தில், கர்த்தர் தம்மை "நல்ல மேய்ப்பனாக" அடையாளப்படுத்தியிருந்தார் (யோவா. 10:11, 14). இந்தப் பாடத்தில், நாம் எல்லா மக்களின்மீதான இந்த நல்ல மேய்ப்பனின் அக்கறையைக் காண்போம்.*

## *ஜனக்கூட்டத்திற்கான அக்கறை (லூக். 10:1-24)*

*மாபெரும் கலிலேய ஊழியமானது பெரும்பாலும், பிந்திய யூதேயா ஊழியத்தைப் போன்றதாகவே அதேபோன்ற போதனையை உள்ளடக்கியதாக இருந்தது. கர்த்தர் மக்களின் புதிய குழுவைச் சென்றடைந்தார் என்ற வகையில் இந்த ஒற்றுமைத் தன்மையானது எதிர்பார்க்கப்பட வேண்டியதாகவே இருந்தது. கலிலேய ஊழியத்தின்போது, கிறிஸ்து வரையறைக்குட்பட்ட கட்டளையுடன் பன்னிருவரை அனுப்பியிருந்தார் (மத். 10:1-42). நமது தற்போதைய வேத பாடப் பகுதியில், அவர் இதைப் போன்று யூதேய முகாம் ஒன்றை ஒழுங்கு படுத்தியிருந்தார்: "இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபதுபேரை[5] நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும், இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார்" (லூக். 10:1).[6]*

*இந்த மனிதர்கள் யார் என்று நாம் அறிவதில்லை, ஆனால் கர்த்தர் அதை அறிந்துள்ளார் (வ. 20).[7] இந்த முயற்சிக்காகக் கர்த்தர் எழுபது புதுப் பணியாளர்களை[8] நியமிக்க முடிந்தது என்ற உண்மையானது தனிச்சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. கலிலேயாவில் அவரது புகழ் உயர்ந்து பின்பு தாழ்ந்திருந்தது. பல சீஷர்கள் பின்வாங்கிச் சென்று இனியும் அவருடன் நடவாதிருந்தார்கள் (யோவா. 6:66). யூதேயாவில் அவரது ஊழியத்தின் மீதான ஆர்வம் புதுப்பிக்கப்பட்டிருந்தது. மீண்டும் ஒருமுறை, அவர் திரளான கூட்டங்களினால் சூழப்பட்டிருந்தார் (லூக். 12:1ஐக் காணவும்).[9] இந்த உணர்வெழுச்சியானது எருசலேமில் வெற்றிப் பிரவேசத்தில் உச்சகட்டத்தை அடைந்தது (மத். 21:1-11).*

### *ஏற்பாடுகள் (லூக். 10:1-16)*

*யூதேயா ஊழியத்திற்கான ஏற்பாடுகள் நடைமுறையில், கலிலேயா ஊழியத்திற்கான ஏற்பாடுகளைப் போன்றதாகவே இருந்தது: ஊழியர்கள் இரண்டிரண்டு பேர்களாக அனுப்பப்பட்டார்கள் (லூக். 10:1; மாற். 6:7ஐக் காணவும்). இயேசு அவர்களுக்கு, குணமாக்கும் மற்றும் அசுத்த ஆவிகளைத் துரத்தும் வல்லமையைக் கொடுத்தார் (லூக். 10:9, 17, 19; மத். 10:8ஐக் காணவும்). தேவனுடைய இராஜ்யம் சமீபமாயிற்று என்பதே அவர்களுடைய அடிப்படைச் செய்தியாயிருந்தது (லூக். 10:9; மத். 10:7ஐக் காணவும்). தனிப்பட்ட நடக்கை பற்றிய அறிவுறுத்தல்கள் பன்னிருவருக்குக் கொடுக்கப்பட்டதற்கு ஒப்பானவைகளாகவே இருந்தன.[10] அந்த அறிவுறுத்தல்கள் பின்வருமாறு தொகுத்துரைக்கப்படலாம்: "பணிமுறை*

*அவசரமானதாக உள்ளது! ஏதொன்றும் உங்களை வழிவிலக்க வேண்டாம்! கர்த்தர்மீது நம்பிக்கையாயிருங்கள்!"*

*பிற்பாடு (லூக். 10:17-24)*

*எழுபது பேர்களும் திரும்பி வந்தபோது, அவர்கள் உணர்வெழுச்சியால் நிரப்பப்பட்டிருந்தார்கள்.[11] அவர்கள், "சந்தோஷத்தோடே திரும்பி வந்து: 'ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது' என்றார்கள்" (வ. 17). கிறிஸ்து, "சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்" என்று கருத்துத் தெரிவித்தார் (வ. 18). சாத்தான் "வானத்திலிருந்து விழுதல்" பற்றிய குறிப்பானது, பிசாசின் தொடக்கத்தையல்ல, ஆனால் இயேசு மற்றும் அவரது அப்போஸ்தலர்களின் ஊழியத்தின் விளைவாக அவனது வல்லமை வீழ்ச்சியுற்றதையே குறிப்பிட்டது. J. W. மெக்கார்வீ அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *காட்சியானது ["கண்டேன்" என்பது], எழுபது பேர்களால் அப்போது அறிக்கை செய்யப்பட்ட அசுத்த ஆவிகளின்மீதான வெற்றியை இவ்வார்த்தை குறிப்பிடுகிறது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. அவர்களின் வெற்றியில், சாத்தான் சிறுமையான உயரங்களில் இருந்து மின்னலின் வேகத்துடன் விழுந்ததை இயேசு கண்டார். பின்பு சாத்தானைத் தூக்கியெறிதல் என்பது வளர்நிலையில் இருந்தது - யோவா. 16:11; 12:31.[12]*

*அவர்களுக்குக் கிறிஸ்து, "சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்க" அதிகாரங் கொடுத்திருந்தார் (லூக். 10:19). அதாவது, அவர்கள் அசுத்த ஆவிகளின் சக்தியின்மீது அதிகாரங்கொண்டிருந்தார்கள்[13] - ஆனால் கிறிஸ்து, "ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்" என்றார் (வ. 20). பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டுமே தேவன்மீது விசுவாசம் கொண்டவர்களின் பட்டியல் அடங்கிய "ஜீவ புத்தகம்" பற்றிப் பேசுகின்றன (சங். 69:28; பிலி. 4:3; வெளி. 21:27). ஒருவருடைய பெயர் "பரலோகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது" என்பதைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது வேறு எதுவும் இல்லை.*

*இந்த நிகழ்ச்சியானது, இயேசு அகம் மகிழ்தலுடன் முடிந்தது. தேவன் தமது சித்தத்தை போலி நடிப்பு காட்டாத இந்த சீஷர்களுக்கு வெளிப்படுத்தியதற்காக அவரை இயேசு துதித்தார் (லூக். 10:21-24; மத். 11:25-27; 13:17).[14]*

## *தனிநபர்களுக்கான அக்கறை (லூக். 10:25-37)*

*எழுபது பேர்களின் ஊழியம், ஜனக்கூட்டத்திற்கான இயேசுவின் அக்கறையைக் காண்பித்தது. அடுத்த நிகழ்ச்சியானது தனிநபர்களுக்கான*

*அவரது பரிவிரக்கத்தைக் காண்பித்தது.*

*இயேசு ஒரு நாளில் போதித்துக் கொண்டிருக்கையில்,[15] ஒரு நியாய சாஸ்திரி, கிறிஸ்து மற்றும் கூட்டத்தில் இருந்தவர்களின் கவனத்தைக் கவருவதற்காக எழுந்து நின்றார் (வ. 25அ). இந்த மனிதர் "சட்ட வல்லுநர்" என்று கருதப்பட்டார் (வ. 25அ; NIV) - இது குடியுரிமைச் சட்டமல்ல, ஆனால் மோசேயின் நியாயப்பிரமாணமாக இருந்தது. இவர் கர்த்தரிடத்தில், "போதகரே,[16] நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார். (வ.25இ) இதைக் காட்டிலும் வேறு எந்தக் கேள்வியும் அதிகம் வலிவார்ந்ததாக இருந்ததில்லை; [ஆனால்] துரதிர்ஷ்டவசமாக இம்மனிதர் இரட்சிப்பின்மீது ஆர்வம் கொண்டிருந்த தில்லை. மாறாக, இவர் "அவரை[கிறிஸ்துவை]ச் சோதிக்கும்படி'' விரும்பினார் (வ. 25ஆ). "இயேசுவின் பழமைவாதக் கொள்கையைச் சோதித்தல்" என்பதே இவரது நோக்கமாக இருந்தது.[17]*

*இவரிடத்தில் கர்த்தர் கேள்வியைத் திருப்பியபோது, இவர் திகைப் படைந்து இருக்க வேண்டும்: ''நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதி யிருக்கிறது?[18] நீ வாசித்திருக்கிறது என்ன?" (வ. 26). இந்த நியாயசாஸ்திரியை ஒவ்வொருவரும் உற்றுநோக்கிக் கொண்டிருக்க, இவர் பதில் கூறாவிட்டால் மதியீனராகத் தோற்றம் அளித்திருப்பார். "அவன் பிரதியுத்தரமாக: 'உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது' என்றான்'' (வ. 27). இயேசுவிடம் பிற்பாடு, ''நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதான மானது?'' என்று கேட்கப்பட்டபோது (மத். 22:36; வ. 35-40ஐக் காணவும்), அவர் இதே பதிலைக் கூறினார். நியாயசாஸ்திரியும் கிறிஸ்துவும் உபாகமம் 6:5 மற்றும் லேவியராகமம் 19:18 ஆகிய வசனங்களில் இருந்து மேற்கோள் காண்பித்தார்கள்.*

*இந்த மனிதரிடத்தில் இயேசு, "நிதானமாய் உத்தரவு சொன்னாய்; அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய்" (வ. 28) என்று கூறினார். சட்டப்படி, நியாயசாஸ்திரிகள் கோட்பாட்டின்மீது வெகு ஆர்வத்துடனும், செயல்பாட்டின்மீது ஆர்வக்குறைவுடனும் இருந்தார்கள். அறிதல் என்பது ஒரு விஷயமாக உள்ளது; செய்தல் என்பது இன்னொரு விஷயமாக உள்ளது.*

*இந்தக் கருத்துப் பரிமாற்றம், இந்த வல்லுநரின் எதிர்பார்ப்புக்குத் திரும்பியிருக்கவில்லை. இவர் இயேசுவுக்காக விரித்த வலையில் இவரே சிக்கிக் கொண்டார்! தற்காப்புவாதத்திற்காக[19] இவர், "எனக்குப் பிறன் யார்?" என்று கேட்டார் (வ. 29). இந்தக் கேள்வியானது, கிறிஸ்துவின் உவமைகளில் மிக நன்கு அறியப்பட்டதும், மிக மேன்மையாக நேசிக்கப்பட்டதுமான ஒரு உவமையைத் தூண்டிற்று: இது ''நல்ல சமாரியன்'' என்று அடிக்கடி அழைக்கப்படுகிற உவமையாக உள்ளது (வ. 30-37).[20] H. I. ஹெஸ்டர் அவர்கள், ''கேள்வி கேட்பதில் உண்மையற்றவராயிருந்த ஒருவரால் தரவழைக்கப்பட்ட இந்த அழகிய கதையானது ... பேசப்பட்ட மற்ற எந்த*

வார்த்தையையும் விட அதிகமாக, மருத்துவமனைகளையும் மற்ற [தர்ம] நிறுவனங்களையும் கட்டியெழுப்பச் செயல்பட்டுள்ளது" என்று கூறினார்.[21]

காயம்பட்டிருந்த ஒரு மனிதனைப் புறக்கணித்த ஆசாரியர், லேவியர் மற்றும் அம்மனிதனுக்கு உதவி செய்த ஒரு சமாரியர்[22] ஆகியோரைப் பற்றிக் கூறிய பின்பு இயேசு, "கள்ளர்கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்று பேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது?" என்றார் (வ. 36). யூதத்துவ நியாயசாஸ்திரியால், "அந்த சமாரியனே" என்று கூற முடியவில்லை. இவர், "அவனுக்கு இரக்கஞ் செய்தவனே" என்று பதில் அளித்தார் (வ. 37அ). "எனக்குப் பிறன் யார்?" என்ற கேள்விக்கு, "தேவையில் உள்ள எவரும் - அவர் [நம்மைச்] சிறுமைப்படுத்திய விரோதியாயிருப் பினும் அவரே" என்பதே பதிலாயிருந்தது.

இயேசு இவரது கண்களில் இவரை உற்றுநோக்கி, "நீயும் போய் அந்தப்படியே செய்" என்றார் (வ. 37ஆ). நியாயசாஸ்திரி அநேகமாகச் சிவந்த முகத்துடன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றிருப்பார்.

## தமது நண்பர்களுக்கான அக்கறை
## (லூக். 10:38-42)

இயேசுவும் அவரது சீஷர்களும் யூதேயாவில் பயணம் செய்கையில், அவர்கள் பெத்தானி[23] என்ற கிராமத்திற்கு வந்தார்கள், இது எருசலே மிலிருந்து தென்கிழக்குத் திசையில் சுமார் இரண்டு மைல்கள் தூரத்தில் ஒலிவமலையின் கிழக்குச் சரிவில் அமைந்திருந்தது. கிறிஸ்துவின் நண்பர் களில் மூவர் அங்கே வாழ்ந்திருந்தார்கள்: லாசரு மற்றும் இவரது இரண்டு சகோதரிகளான மார்த்தாள், மரியாள் (வ. 38, 39; யோவா. 11:1, 2ஐக் காணவும்).[24]

மார்த்தாள் தனது இல்லத்திற்குள் கர்த்தரை ஏற்றுக்கொண்ட பின்பு (வ. 38), இவள் ஒரு விருந்து தயாரிக்கத் தொடங்கினாள் (வ. 40). இவள் வேலை மும்முரமாக இருக்கையில், மரியாள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, "அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்" (வ. 39). மார்த்தாள் தனது சகோதரி [தனக்கு] உதவிசெய்யாதது பற்றி முறையிட்டபோது கிறிஸ்து, "மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங் களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே,[25] மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்" என்றார் (வ. 41, 42).

இயேசு உபசரிப்புத் தன்மையை, உணவு தயாரித்தலை அல்லது கடின உழைப்பைத் தாழ்த்திப் பேசினாரா? இல்லை. சரியான வேளையிலும் இடத்திலும் இவை யாவும் நல்லவைகளாகவே உள்ளன. மாறாக, அவர் முன்னுரிமைகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி னார். நல்லதாக உள்ளது மற்றும் மிகச் சிறந்ததாக உள்ளது ஆகியவற்றிற் கிடையில் ஒன்றைத் தேர்ந்துகொள்ளுதல் என்பது வாழ்வின் அறைகூவல் களில் ஒன்றாக உள்ளது. தற்காலிகமானது மற்றும் மாறக்கூடியது பற்றி நாம் கவலைப்பட்டுக்கொண்டிருக்கையில், "தேவையானது ஒன்றே" என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.

## *தமது சீஷர்களுக்கான அக்கறை (லூக். 11:1-13)*

*இயேசு பிறருக்கு உதவ உழைத்துக் கொண்டிருக்கையிலும் கூட, அவர் தமது அப்போஸ்தலர்களுக்கு அறிவுறுத்துதலைப் புறக்கணித்து விடாதிருந்தார். ஒருநாள் அவர் ஒரு ஜெபவேளையை முடிக்கையில், அவரது சீஷர்களில் ஒருவர் அவரிடத்தில், "ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்துபோல, நீரும் எங்களுக்குப் போதிக்க வேண்டும்"[26] என்று கேட்டுக்கொண்டார் (வ. 1). கிறிஸ்து முதலில், மலைப் பிரசங்கத்தில் முன்பே தாம் கொடுத்திருந்த மாதிரி ஜெபத்தைத் திரும்பவும் கூறினார் (வ. 2-4; இதை மத். 6:9-13உடன் ஒப்பிடவும்).[27] அவர் இதைத் தொடர்ந்து, ஜெபத்தின் மதிப்பு மற்றும் விடாமுயற்சியின் அவசியம் பற்றிய பொதுவான போதனையைக் கூறினார்.[28] அவர் இவ்விடத்தில் கூறியவற்றில் பெரும்பான்மையானவை, அவரது முந்திய போதனைகளின்[29] பிரதியாக்கமாகவே இருந்தன, அத்துடன் ஒரு சில புதிய போதனைகளும் கூட்டிக் கொள்ளப்பட்டிருந்தன,[30] இவற்றில் விடாமுயற்சியுள்ள நண்பரின் உவமையும் உள்ளடங்கியிருந்தது.[31] இவ்விதமாக, இயேசு தாம் இந்த பூமியை விட்டு எடுபடும் காலத்திற்காகப் பன்னிருவரை ஆயத்தப் படுத்தினார்.*

## *தமது விரோதிகளைக் குறித்து அக்கறை (லூக். 11:37-12:12)*

***அழைப்பு (11:37, 38)***

*அடுத்த நிகழ்ச்சியானது[32] ஒரு திகைப்புக்குரியதாக வரலாம். பரிசேயர்கள் இயேசுவை அழிக்க நாடிக் கொண்டிருந்த வேளையிலும்கூட (மத். 12:14; மாற். 3:6), "பரிசேயன் ஒருவன் தன்னுடனே கூட அவர் பகற்போஜனம் பண்ண வேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான்" (லூக். 11:37). இந்த அழைப்பானது நட்புறவின் சைகையாக இருந்திருக்கலாம்; யூதத் தலைவர்களிலும் சிலர் அவர்மீது விசுவாசமாய் இருந்தார்கள் (யோவா. 12:42). இந்த மனிதர் இயேசுவைப் பற்றிய தமது சிந்தையை இன்னும் சரிப்படுத்திக்கொள்ளாதிருந்து, அவரை அறியும்படி விரும்பியிருக்கவும் சாத்தியக்கூறுண்டு. இருப்பினும், சந்தர்ப்பப் பொருளானது, இந்த அழைப்பில் ஒரு இரகசியமான நோக்கம் இருந்ததைச் சுட்டிக் காண்பிக்கிறது:[33] "அவர்மேல் குற்றஞ்சாட்டும்பொருட்டு, அவர் வாய்மொழியில் ஏதாகிலும் பிழை கண்டுபிடிக்க வேண்டுமென்று" (லூக். 11:53ஆ).*

*இது கர்த்தர், பரிசேயர் ஒருவரின் இல்லத்திற்கு அழைக்கப்பட்ட இரண்டாவது முறையாக இருந்தது. முன்னதாகக் கலிலேயாவில், கிறிஸ்து ஒரு பரிசேயருடன் உணவு உண்டிருந்தார் (லூக். 7:36-50). லூக்கா 14:1-24ல் நாம் இதைப் போன்ற மூன்றாவது அழைப்பு ஒன்றைப் படிப்போம்.*

ஒவ்வொரு உணவு உண்ணுதலும் கர்த்தருக்கும் அவருக்கு விருந்தளித்த வருக்கும் இடையில் ஒரு வாக்குவாதத்தை விளைவித்தது. இது, “இப்படிப் பட்ட அழைப்புக்களை இயேசு ஏன் ஏற்றுக்கொண்டார்?’’ என்ற கேள்வியைத் தூண்டுகிறது. நிச்சயமாகவே, அவர் இலவச உணவுக்காக நம்பிக்கையிழந்த நிலையில் இருக்கவில்லை. அவர் பரிசேயர்களைக் குற்றம்பிடிக்க வாய்ப்புகளை எதிர்நோக்கியிருந்தார் என்ற சாத்தியக் கூற்றையும் நாம் புறக்கணித்தாக வேண்டும். கிறிஸ்து தமது நண்பர்கள் பற்றிக் கொண்டிருந்த அக்கறை போலவே, தமது விரோதிகள் பற்றியும் அக்கறை கொண்டிருந்தார் என்று நான் கருத்துத் தெரிவிக்க அனுமதியுங்கள் (மத். 5:44ஐக் காணவும்). அவரது விரோதிகள் மனமாறுதல் என்பதைக் காட்டிலும் வேறு எதுவும் அவரை அதிகம் மகிழ்ச்சியடையச் செய்திருக் காது. பரிசேயர்களைப் பற்றிய அவரது கடுமையான வார்த்தைகள், அவரது சீஷர்கள் பரிசேயர்களின் மாதிரியைப் பின்பற்றுவதை ஊக்கங்குறையச் செய்வதற்கானவைகளாய் இருந்தன. அவரது எதிராளிகளில் சிலராவது மனந்திரும்புதலை நோக்கி நகருவார்கள் என்ற நம்பிக்கையில் அவ்வார்த் தைகள் பேசப்பட்டன என்றும் நாம் நினைக்க வேண்டும்.

இயேசு இந்தப் பரிசேயரது வீட்டிற்கு வந்தபோது, அவர் பாரம்பரியத் தால் குறிப்புரைக்கப்பட்டிருந்த விரிவான சடங்குகள் எதையும் செய்யாம லேயே உணவு மேஜையில் சாய்ந்தமர்ந்தார். “அவர் போஜனம் பண்ணுகிற தற்கு முன் கைகழுவாமலிருந்ததைப் பரிசேயன் கண்டு ஆச்சரியப்பட்டான்” (வ. 38).[34] இப்படிப்பட்ட பாரம்பரியங்களைக் குறித்துக் கிறிஸ்துவும் அவரது சீஷர்களும் அக்கறையற்று இருந்தார்கள் என்று விருந்தளித்தவர் கேள்விப்பட்டிருக்கலாம் (மத். 15:1, 2), ஆனால் இதை முதன்முறையாக நேரில் பார்த்தபோது இவர் இன்னமும் அதிர்ச்சியடைந்தார்.

### குற்றச்சாட்டுகள் (11:39-54)

பரிசேயரைப் பொறுத்தமட்டில், இயேசு சடங்காச்சார ரீதியாக அசுத்தமானவராக இருந்தார், ஆனால் வெளிப்புற சுத்தமல்ல, உட்புற சுத்தமே ஒருவர் மிகவும் அக்கறை கொண்டிருக்க வேண்டியதாக உள்ளது என்று கர்த்தர் வலியுறுத்தினார் (லூக். 11:39, 40; மத். 23:25, 26ஐக் காணவும்). விருந்தளித்தவரிடத்தில் அவர் [இயேசு], “உங்களுக்கு உண்டானவைகளில் பிச்சை கொடுங்கள், அப்பொழுது சகலமும் உங்களுக்குச் சுத்தமாயிருக்கும்” என்று கூறினார் (வ. 41). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், ‘‘உங்கள் உள்ளான இருதயத்தைப் பிறரின் நலனுக்காக நீங்கள் அர்ப்பணித்தால், இது நீங்கள் உள்ளும் புறம்பும் ‘சுத்தமாயிருப்பதை’ உறுதிப்படுத்தும்” என்று அவர் கூறினார்.

இந்தக் கூற்றைத்தொடர்ந்து பல “ஐயோ”க்கள் வந்தன (வ. 42-44). இவைகள் பிற்பாடு, வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்கள்மீது கடுமையான பழிப்புரையாக விரிவாக்கப்படும் (மத். 23).[35] நியாயசாஸ்திரியான இன்னொரு விருந்தினர் மனம் புண்பட்டார்: “போதகரே, நீர் இப்படிச் சொல்லுகிறதினால் எங்களையும் நிந்திக்கிறீரே” (லூக். 11:45).

ஐயோக்களைத் தொடர்ந்து இயேசு, நியாயசாஸ்திரிகளுக்கு

நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தி பதில் அளிக்கலானார் (வ. 46-52): "நியாயசாஸ்திரிகளே, உங்களுக்கு ஐயோ, அறிவாகிய திறவுகோலை எடுத்துக் கொண்டீர்கள், நீங்களும் உட்பிரவேசிக்கிறதில்லை, உட்பிரவேசிக்கிறவர்களையும் தடைபண்ணுகிறீர்கள்" (வ. 52). பழைய ஏற்பாடு, "அறிவாகிய திறவுகோலாக" இருந்தது. அந்த ஏற்பாட்டைச் சரியாக அர்த்தப்படுத்திக் கொள்ளுதலே மேசியாவையும் அவருடைய ராஜ்யத்தையும் புரிந்துகொள்வதற்கு திறவுகோலாக இருந்தது. இருப்பினும், "நியாயப்பிரமாணத்தில் வல்லுநர்கள்" என்று அறியப் பட்டிருந்தவர்கள், மேசியா உலகப் பிரகாரமான ஒரு ராஜ்யத்தை அமைப்பார் என்ற தங்களின் யூகத்தினால் அந்தத் திறவுகோலை இல்லாததாக்கினார்கள். மற்றவர்கள்மீது இந்தத் தவறான யூகங்களைத் திணித்ததினால், இந்த தலைவர்கள் தங்கள் மாணவர்களை, ராஜா வந்தபோது அவரை உணர்ந்தறிவதிலிருந்து தடை செய்தார்கள்.[36]

இயேசுவின் குற்றச்சாட்டுகள் அவருடைய எதிரிகளின் வெறுப்புணர்ச்சியை அதிகப்படுத்தின. "இவைகளை அவர்களுக்கு அவர் சொல்லுகையில், வேதபாரகரும் பரிசேயரும் அவர்மேல் குற்றஞ்சாட்டும் பொருட்டு, அவர் வாய்மொழியில் ஏதாகிலும் பிழை கண்டுபிடிக்க வேண்டும் என்று உபாயம் பண்ணி அவரை மிகவும் நெருக்கவும், அநேக காரியங்களைக் குறித்துப் பேசும்படி அவரை ஏவவும் தொடங்கினார்கள்" (வ. 53, 54).

### பழித்துரைத்தல் (12:1-12)

லூக்கா 12ம் அத்தியாயம், "அத்தருணத்திலே ..." என்று தொடங்குகிறது.[37] இயேசுவுக்கும் பரிசேயர்களுக்கும் இடையில் மோதல்கள் எழுந்ததே அந்தத் "தருணமாக" இருந்தது. அந்த மோதல்கள் பொது மக்களின் ஆர்வத்தை வளர்த்ததை விளைவித்தன. இவ்விதமாக வசனம் 1, "அத்தருணத்திலே, அநேகமாயிரம் ஜனங்கள் ஒருவரையொருவர் மிதிக்கத் தக்கதாகக் கூடிவந்திருக்கையில், அவர் ..." என்று கூறுகிறது. கூட்டத்தில் இருந்த சிலர் அவருக்கு ஆதரவாகச் சாய்ந்திருந்தார்கள், மற்றவர்கள் அவருக்கு எதிர்ப்பாக இருந்தனர் (12:56ஐக் காணவும்).

ஜனக்கும்பல் கவனித்துக் கொண்டிருக்கையில், கிறிஸ்து பல்வகையான செய்திகளை எடுத்துரைத்தார். அவர் பரிசேயர்களைப் பற்றிய ஒரு எச்சரிக்கையுடன் தொடங்கினார்: "அவர் முதலாவது தம்முடைய சீஷரை நோக்கி: 'நீங்கள் மாயமாகிய பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்' [என்று கூறத்தொடங்கினார்]" (வ. 1ஆ). பரிசேயர்கள் தங்கள் அக்கிரமத்தை மறைத்ததில் திறன்மிக்கவர்களாய் இருந்தனர் (11:39); ஆனால், கடைசியில் அவர்களின் பொல்லாங்கு வெளியாக்கப்படும் (12:2). இயேசு தமது உரையைக் கேட்டவர்களை, இந்த மனிதர்களுக்குப் பயப்படக்கூடாது (வ. 4), ஆனால் அதற்கு மாறாக, அவர்கள் தங்களின் விசுவாசத்தை அறிக்கையிடுவதில் தைரியமாய் இருக்க வேண்டும் (வ. 3, 8), தேவன் தங்களுடன் இருப்பதில் நம்பிக்கை வைக்க வேண்டும் (வ. 5-12) என்று வற்புறுத்தினார்.[38]

# முடிவுரை

அடுத்த பாடத்தில் நாம், இயேசு கூட்டத்தாரின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் எடுத்துரைத்த பொதுவான போதனையைத் தொடருவோம் (லூக். 12:13-13:9). கர்த்தருடைய அக்கறை முழுவதும் இப்பாடத்தில் காண்பிக்கப்பட்டதென்று நான் நம்பிக்கையாய் இருக்கின்றேன். நம்மில் ஒவ்வொருவரும் பிறர்மீது அதிகப் பரிவிரக்கத்தைக் காண்பிக்கும்படிக்குத் தூண்டப்பட்டுள்ளோம் என்றும் நான் நம்பி இருக்கின்றேன். "'பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்' என்பதின் கருத்து இன்னதென்று [அறியுங்கள்]" (மத். 12:7அ); "ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும், பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக் கொள்ளுங்கள்" (கொலோ. 3:12).

---

குறிப்புகள்

[1]பல்வேறு இசைவுகளில், பொதுவான இந்தக் காலம் பற்றிய மாறுபாடு இயேசுவின் வாழ்வின் வேறு எந்தப் பகுதியைப் போலவே (அல்லது அதைக் காட்டிலும்) பெரிதாக உள்ளது. [2]விசுவாசமிக்க யூதர்கள், அந்த வேளையில் பண்டிகைக்காக எருசலேமில் இருந்திருப்பார்கள் என்பதால் இது சாத்தியமற்றதாக உள்ளது. [3]லூக்கா 10:13, 15 வசனங்கள் கலிலேய நகரங்களைக் குறிப்பிடுவதால், எழுபது பேர்களை அனுப்பிய நிகழ்ச்சியானது மாபெரும் கலிலேய ஊழியத்திற்குப் பொருந்தி வருவதாகக் கூடச் சிலர் நினைக்கின்றார்கள். [4]மீண்டும் மீண்டும் கூறுதல் என்ற இடர்ப்பாட்டில் நான், சுவிசேஷ விவரங்களுக்கு நாள்வரிசை முறைமை என்பது ஒரு பிரதான காரணியாக இருந்ததில்லை என்பதை உங்களுக்கு நினைவுபடுத்துகின்றேன். [5]பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள் சில எழுபத்தியிரண்டு பேர்கள் என்று கூறுகின்றன. சரியான எண்ணிக்கை முக்கியமற்றதாக உள்ளது. [6]இந்த இரண்டு பிரசங்க முகாம்களுக்கும் இடையில் பல ஒற்றுமைத்தன்மைகளும், சில வித்தியாசங்களும் உள்ளன. பன்னிருவரின் ஊழியம் கலிலேயாவில் பொதுவான ஊழியத்தை முடித்திருக்கையில், எழுபது பேர்களின் ஊழியம் யூதேயாவில் கர்த்தருடைய ஊழியத்திற்கு ஆயத்தம் செய்வதாக இருந்தது என்பது ஒரு வித்தியாசமாக உள்ளது. [7]ஏவுதல் பெற்றிராத பாரம்பரியத்தின்படி, யூதாஸு¬க்குப் பதிலாக அப்போஸ்தலராவதற்குச் சாத்தியமானவர்கள் (அப். 1:23) என்று பிற்பாடு பெயர் குறிப்பிடப்பட்ட இருவரும் இந்த எழுபது பேர்களின் குழுவில் இருந்தார்கள் என்று கூறப்படுகிறது. [8]இயேசு தாம் யூதேயாவுக்குச் செல்லும் வழியில் சீஷர்களைத் தேர்ந்து நியமித்துக் கொண்டிருந்தார் என்பது உறுதி (லூக். 9:57-62). [9]கிறிஸ்து இனியும் தனித்திருத்தல் மற்றும் அவரது உரையைக் கேட்டவர்களின் தடை ஆகியவை பற்றி அக்கறை கொண்டிருக்கமாட்டார். அவர் யூத அதிகாரிகளுடன் தமது கடைசிப் போராட்டம் மற்றும் மரணம் ஆகியவற்றை நோக்கித் தீர்மானத்துடன் நடையிட்டுக் கொண்டிருந்தார். [10]பின்வரும் வசனப்பகுதிகளை ஒப்பிடவும்:

| | |
|---|---|
| லூக். 10:2 / மத். 9:37, 38 | லூக். 10:3 / மத். 10:16 |
| லூக். 10:4 / மத். 10:11-13 | லூக். 10:5-8 / மத். 10:11-13 |
| லூக். 10:9 / மத். 10:7, 8 | லூக். 10:10, 11 / மத். 10:14 |

*லூக். 10:12 / மத். 10:15* *லூக். 10:13-15 / மத். 11:20-24*
*லூக். 10:16 / மத். 10:40*

[11]*நீங்கள் வாழும் இடத்தில் அர்த்தம் கொண்டுள்ள ஒப்புவமையைப் பயன் படுத்தவும்: "தங்கள் முதல் பந்து விளையாட்டில் வெற்றி பெற்ற இளம்பையன்களின் குழுவைப் போன்று" என்பதுபோல் அல்லது வேறு ஏதாவது.* [12]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 473. [13]*பல்வேறு காலகட்டங்களில் கர்த்தர் தம்மைப் பின்பற்றியவர்களை உண்மை யான விஷப்பூச்சிகளிடமிருந்து பாதுகாத்தார் (மாற். 16:18; அப். 28:3-6), ஆனால் இந்த சந்தர்ப்பப் பொருளில், உருவகமான அர்த்தம் குறிப்பிடப்படுகிறது.* [14]*லூக். 10:21 மற்றும் மத். 11:25ல் உள்ள "பாலகர்" என்பது, சிறுபிள்ளை போன்ற தன்மைகள் கொண்ட சீஷர்களைக் குறிப்பிடுகிறது (இந்தப் புத்தகத்தில் சீஷத்துவத்தின் அடையாளங்கள் என்ற பாடத்தில் "சிறுபிள்ளையைப் போன்று இருத்தல்" பற்றிய கலந்துரையாடலைக் காணவும்).* [15]*வசனம் 30ல் இயேசு, எருசலேமில் இருந்து எரிகோ செல்லும் சாலையைக் குறிப்பிட்டார் என்ற உண்மையானது, அவர் அந்தப் பொதுவான பகுதியில் போதித்துக் கொண்டிருந்தார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கலாம். அந்தச் சாலை பெத்தானியின் வழியே கடந்து சென்றது.* [16]*இந்த நியாயசாஸ்திரி, இயேசுவை ''போதகரே'' என்று அழைப்பதன்மூலம் கிறிஸ்துவுக்கு மரியாதை செலுத்துவதுபோல் பாசாங்கு செய்தார்.* [17]The Living Bible paraphrase. [18]*இயேசு மரித்த வேளை வரையிலும் மோசேயின் நியாயப்பிரமாணம் அமலில் இருந்தது (கொலோ. 2:14, 16, 17). "நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்வியானது சிலுவையின் இந்தப் பக்கத்தில் மாறுபட்டதாக உள்ளது.* [19]*இந்த நியாயசாஸ்திரி, "தம்மை நியாயப்படுத்திக் கொள்ள" விரும்பினார் என்று வேத பாடப்பகுதி கூறுகிறது.* The Living Bible *என்ற வேதாகமப் பொழிப்புரையானது, இவர் (''சில வகைப்பட்ட மக்களின்மீது தமது அன்புக் குறைபாட்டை'') நியாயப்படுத்த விரும்பினார் என்று கருத்துத் தெரிவிக்கிறது.* [20]*இது, இயேசுவின் வாழ்வில் இந்தக் காலவேளையில் பேசப்பட்ட உவமைகளில் வரிசையில் முதலாவதாக இருந்தது; இந்த உவமைகள் லூக்காவில் மட்டுமே காணப்படுகின்றன.*

[21]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 167. [22]*யூதர்கள் சமாரியர்களை எவ்வளவுக்கு வெறுத்தார்கள் என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள் (யோவா. 4:9). சற்றுக் காலத்திற்கு முன்புதான் கிறிஸ்து சமாரியர்களால் புறக்கணிக்கப்பட்டிருந்தார் (லூக். 9:52, 53) என்பதை நினைவில் வைக்கும்போது, இந்தக் கதை அதிகம் குறிப்பிடத்தக்கதாக உள்ளது.* [23]*லூக். 10:38-42 வசனப்பகுதியானது நகரத்தின் பெயரைக் குறிப்பிடுவதில்லை, ஆனால் யோவான் 11:1 வசனமானது, மரியாளும் மார்த்தாளும் பெத்தானியில் வாழ்ந்தார்கள் என்று நமக்குக் கூறுகிறது.* [24]*"மார்த்தாள் … அவரைத் தன் வீட்டில் ஏற்றுக்கொண்டாள்" என்று வேத பாடப் பகுதி கூறுகிறது. இவள் அநேகமாக, மூன்று உடன் பிறந்தவர்களில் மூத்தவளாக இருந்திருக்கலாம்.* [25]*"தேவையானது ஒன்றே" என்பது, "ஒரே ஒரு வகை உணவே போதுமானதாக இருக்கும், எனவே இவ்வளவு அதிகமாக உணவு தயாரித்தல் குறித்து நீ ஏன் சிடு சிடுத்துக் கொண்டிருக்கின்றாய்?" என்று அர்த்தப்படுவதாகச் சிலர் நினைக்கின்றார்கள். இருப்பினும், கர்த்தரின் வார்த்தைகள், பல விஷயங்கள் நல்லவைகளாயிருக்க, ஒன்றே ஒன்றுதான் அவசியமானதாக உள்ளது: ஆத்துமாவின் மீது அக்கறை கொள்ளுதல் என்பதே அந்த அவசியமான விஷயமாகும்.* [26]*லூக். 5:33 வசனமானது, யோவானின் சீஷர்கள் ஜெபித்தார்கள் என்று குறிப்பிடுகிறது, ஆனால் ஜெபத்தைப் பற்றி யோவான் தமது சீஷர்களுக்கு எப்போது அல்லது எதைப் போதித்தார் என்பது பற்றிய பதிவேடு*

*எதையும் நாம் கொண்டிருப்பதில்லை. யூதத்துவப் போதகர்கள் தங்கள் சீஷர்களுக்கு, எவ்வாறு ஜெபிப்பது என்று கற்றுத் தருதல் பொதுவான நடைமுறைப் பழக்கமாக இருந்தது. [27]இரு சுவிசேஷ விவரங்களிலும் வார்த்தையமைப்பு வேறுபட்டதாக உள்ளது என்ற உண்மையானது, நாம் ஜெபத்தை உருப்போட்டுக் கூற வேண்டும் என்று கர்த்தர் ஒருக்காலும் விரும்பியதில்லை என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. [28]இவ்வசனங்கள் பற்றிய விரிவான படிப்பு ஒன்றை, அடுத்துவரும், "ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்கக் கற்றுத்தாரும்" என்ற பிரசங்கத்தில் காணவும். [29]லூக். 11:9-13ஐ மத். 7:7-11உடன் ஒப்பிடவும். [30]லூக். 11:12 வசனமானது லூக்காவுக்கே உரிய தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது. மேலும், தேவன் தமது பிள்ளைகளுக்குத் தரும் ஈவுகளைக் குறிப்பிடுவதில், மத்தேயு "நல்லவற்றை" என்று கூறியிருக்க, லூக்கா "பரிசுத்த ஆவியை" என்று கூறியுள்ளார் (மத். 7:11; லூக். 11:13).*

*[31]"சங்கடப்பட்ட விருந்தளிப்பவர்" என்பது உட்பட, இதற்கு மற்ற பெயர்களும் தரப்பட்டுள்ளது. [32]11:13 மற்றும் 11:37 ஆகியவற்றிற்கு இடையில் லூக்கா வேறு இரண்டு கதைகளை, நாம் ஏற்கனவே படித்துள்ள கதைகளை உட்செருகினார். [33]இம்மனிதரின் மறுசெயல் (லூக். 11:38), இயேசுவின் பதிலுரை (வ. 39-52) மற்றும் நிகழ்ச்சித் தொடர் (வ. 53, 54) ஆகியவை நம்மை, இவ்விருந்தளித்தவர் இரகசியமான நோக்கங் கொண்டிருந்தார் என்று நம்பும்படி நடத்துகின்றன. [34]லூக். 11:38ல் "கழுவி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது ஞானஸ்நானம் (முழுக்காட்டுதல்) என்ற வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது. இயேசு உண்பதற்கு முன்பு தமது முழு உடலையும் கழுவாதது குறித்துப் பரிசேயர் திகைப்படைந்து இருந்தார். [35]பின்வரும் வசனப்பகுதிகளை ஒப்பிடவும்:*

*லூக். 11:39-41 / மத். 23:25, 26*
*லூக். 11:42 / மத். 23:23*
*லூக். 11:43 / மத். 23:6, 7*
*லூக். 11:44 /மத். 23:27, 28*
*லூக். 11:46 / மத். 23:4*
*லூக். 11:49-51 / மத். 23:34-36*
*லூக். 11:52 / மத். 23:13*

*[36]பேதுரு செய்த செயலுக்கு நேர்மாறானதை நியாய சாஸ்திரிகள் செய்தார்கள் என்பது, லூக். 11:52ஐக் கண்ணோக்குவதற்கான இன்னொரு வழிமுறையாக உள்ளது: அவர்கள் "அறிவாகிய திறவுகோலை" ஒளித்து வைத்துக்கொண்டு, இவ்விதமாக மக்களை ராஜ்யத்திற்குள் வர அனுமதிக்காமல் இருந்தார்கள், பேதுருவோ "ராஜ்யத்தின் திறவுகோல்களைப் பயன்படுத்தினார்" (மத். 16:19) மற்றும் ராஜ்யத்தின்/சபையின் கதவுகளைப் பெந்தெகொஸ்தே நாளன்று அகலமாய்த் திறந்து வைத்தார் (அப். 2:14-41). [37]சில மொழிபெயர்ப்புகளில் "அதே வேளையில்" அல்லது "அவ்வேளையில்" என்றுள்ளது, ஆனால் மூல வேதபாட வசனமானது "இவ்விஷயங்கள் [நடைபெற்ற வேளையில்]" என்ற நேரடியாக அர்த்தப்படுகிறது. "இந்தச் சூழ்நிலைகளில்" என்பது கருத்தை அறிவிக்கிறது. [38]லூக்கா 12:1-12லுள்ள பெரும்பாலான போதனைகள் வேறு இடங்களிலும் திரும்பவும் கொடுக்கப்பட்டுள்ளன. பின்வரும் வசனங்களை ஒப்பிடவும்:*

*லூக். 12:1 / மத். 16:6; மாற். 8:15*
*லூக். 12:2-9 / மத். 10:26-33*
*லூக். 12:8, 9 / மாற். 8:38*
*லூக். 12:10 / மத். 12:31, 32; மாற். 3:28-30*
*லூக். 12:11, 12 / மத். 10:19, 20.*